DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
CALENDER CASE No.27/2014
Prosecution Witness PW 3
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. A.முருகன் | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் - **13.11.2024.**

எதிரி ஆஜர்.

**முதல்விசாரணை-**

நான் தற்போது மதுரை புதூர் தமிழ்நாடு மின்சார வாரிய பகிர்மானம் (மெட்ரோ) பிரிவில் உதவி செயற்பொறியாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25.09.2005 ம் தேதியன்று டி.கல்லுப்பட்டி மின்பிரிவில் உதவி மின்பொறியாளராக பணியில் இருந்த போது, அன்றையதினம் சுமார் இரவு 11.30 மணியளவில் மின்தடுப்பு பிரிவில் இருந்து மாணிக்கவிநாயகர் ஸ்பின்னிங் மில் சர்வீஸ் எண். HT SC 116 ஆய்வு செய்ய வேண்டி எனக்கு A.D.E மூலம் தகவல் தெரிந்து, என்னை சம்பவ இடத்திற்கு வர சொல்லி நான் என்னுடைய களப்பணியாளர்களுடன் சம்பவ இடத்திற்கு இரவு சுமார் 11.45 முதல் 11.55 மணிக்குள் சென்றேன். நான் சம்பவ இடம் சென்ற போது MRT மற்றும் அமலாக்கபிரிவினர் அங்கு இருந்தார்கள். அங்கு இருந்த ஆனந்தன் என்பவருக்கு தகவல் சொல்லி அந்த HT பிரிவை ஆய்வு செய்தோம். அங்கு இருந்த HT கேட் சீல் நான் வைத்தது தானா என்று கேட்டதன் அடிப்படையில் நான் என்னுடைய சீல் தான் என்று உறுதிபடுத்தினேன். அதன்பின்பு, அவர்கள் அந்த சீலை உடைத்து, உள்ளே சென்று MRT, அமலாக்க துறையும் சேர்ந்து மீட்டரை ஆய்வு

செய்த போது நான் உடன் இருந்தேன். அன்றையதினம் மீட்டரை கழற்றவில்லை. மறுநாள் மேற்படி மீட்டரை லோக்கல் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் முன்பாக மேற்படி மீட்டர் பெட்டியை கழற்றி கொண்டு வந்து, காவல்நிலையத்தில் என்னுடைய களப்பணியாளர் உதவியுடன் 27.09.2005 ம் தேதியன்று ஒப்படைத்தோம். இதுசம்பந்தமாக காவல்ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்குவிசாரணை**

நான் மொத்தம் எத்தனை ஆண்டுகாலம் பணியாற்றினேன் என்றால் 37 ஆண்டுகள் பணியாற்றி கொண்டிருக்கிறேன். எனக்கு மின்சார வாரியத்தின் சட்டமும், சட்டவிதிகளும் நன்கு தெரியும் என்று சொன்னால் ஓரளவு தெரியும். என்னை இந்த வழக்கு குறித்து என்று, எந்த இடத்தில் வைத்து யார் விசாரித்தனர் என்றால் 27.09.2005 அன்று டி.கல்லுப்பட்டி காவல்நிலையத்தில் காவல்ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் காவல்ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் அன்றையதினம் மீட்டர் பெட்டி சம்பந்தமாக தான் சொன்னேன். 25.09.2005 ம் தேதி மாணிக்கவிநாயகர் ஸ்பின்னிங் பேக்டரிக்கு ஆய்வுக்குழுவோடு நான் சென்றதை காண்பிக்கக் கூடிய ஆவணங்கள் எதுவும் இந்த நீதிமன்றத்தில் இல்லை என்று சொன்னால் சரிதான். அதேபோல் மீட்டர்பெட்டி கைப்பற்றப்பட்ட போது நான் அந்த இடத்தில் இருந்தேன் என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணம் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன இரண்டு தினங்களிலும் நான் எந்த ஒருஆய்வு பணியிலோ, கைப்பற்றுதல் பணியிலோ நான் கலந்து

கொள்ளவில்லை என்றும், போலிசார் சொல்லிக் கொடுத்ததன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.